

# காந்திநிகேதன் குரல்

# Voice of Gandhiniketan










## செய்யும் தொழிலே தெய்வம்





வாய்மையே வெல்லும்

# தலையங்கம்

நடப்பியல் வாழ்வில் தவிர்க்க முடியாத சாதனமாக இருப்பது அலைபேசி. ஊடகங்களின் வரிசையில் உலகநிகழ்வுகளையும், செய்திகிளின் பரிமாற்றங்களையும் குறுந்தகவல்களாக , ஒளிக்காட்சிகளாக வெளிப்படுத்தும் கையடக்கக்கருவி.

சமூக வலைத்தளங்களில் முதலிடம் பிடிக்கும் அலைபேசி இன்றைய இளைஞர்களை படுத்தும்பாடு சொல்லி விட முடியாது. ஆக்கபூர்வ நிகழ்வுகளுக்குப் பயன்பட வேண்டிய இக்கருவி இன்று தனிமனித வக்கிரங்களையும் , சமூதாய ஒழுக்க மீறல்களையும் , புனிதமான இல்லற உறவுகளை வெளிச்சம் போட்டு காட்டியும் ,சமுதாயத்தில் எதுவும் தவறல்ல என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியுள்ளது அலை பேசி இல்லையெனில் வாழ்க்கையே இல்லை என்று பலரை நினைக்குமளவிற்கு மாற்றியுள்ளது.

இக்கருவியின் விளைவு மனிதரிடம் சோம்பேறித்தனம் அதிகரித்துள்ளது. "ஓடிவிளையாடு பாப்பா – நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா" என்றான் பாரதி. அலை பேசியில் உட்கார்ந்து கொண்டே கேம் விளையாடுவதினால் முதுமையில் வரவேண்டிய நோய்கள் இளைமையிலே வருகின்றன. சிந்தனைப் பைத்தியங்களாக பலர் மாறும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதை என்னவென்று சொல்ல?

கையடக்கக் கருவிகள் அனைத்தையும் விநாடிகளில் தெரிந்து கொள்ளும் நாம் வாழ்க்கையின் பொன்னான விநாடிகளை தொலைத்துக் கொண்டிருக்கிறோம் ஆகவே அலைபேசியை தேவைக்குப் பயன்படுத்துங்கள் மனதை அலைய விடாமல் தேவையற்றவைகளுக்கு பயன்படுத்தாதீர்கள்.

இரா.ஜெனகராஜன்
முதுகலை தமிழாசிரியர்

## அன்புள்ள ஆசிரமத் தாய்க்கு....

விழுதுகள் மரத்தைத் தாங்கலாம் ஆனால் அதன் வேர்கள் மட்டுமே அதனை வாழ வைக்க முடியும். காந்திநிகேதன் ஆசிரமம் என்னும் ஆல விருட்சத்தின் ஒரு வேர் போன்ற எங்கள் ஆசிரமத் தாயே! சித்தையன் கோட்டை என்னும் கிராமத்தில் அஞ்சூரான் புஞ்சைக்காரர் என்று சுற்றுப்புற மக்கள் புகழத்தக்க செல்வாக்கு பெற்றிருந்த நிலக்கிழார் குடும்பத்தில் 1915 ஆம் ஆண்டு பிறந்து செல்வச் சீமாட்டியாக செல்லமாக வளர்ந்து 1939ல் எளிமையே வடிவான காந்தியடிகளின் நிர்மாணத் தொண்டர் கோ.வே. அவர்களை மண முடித்த பின் ஐயா அவர்களின் பாதையிலே பயணித்து ஐயா அவர்களைப் போன்றே எளிய வாழ்க்கைக்கு உங்களை மாற்றிக் கொண்டு, ஐயா அவர்களின் எண்ணங்களை செயலாக்கிட உதவிய சிற்பியாக விளங்கினீர்கள். ஐயா அவர்களின் சமூகப் பணிகளிலும், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட நேரங்களிலும் அவரை நிழலாகத் தொடர்ந்தீர்கள், ஐயா அவர்களின் கனவான காந்திநிகேதன் ஆசிரமம் 1940-ல் ஆரம்பித்திட ஐயா அவர்களுக்கு மனைவி என்ற



நிலையிலும் நட்பாய், உறவாய் ஆக்கமும், ஊக்கமும் அளித்ததனாலே 1940 ஏப்ரல் 28-ல் காந்திநிகேதன் என்னும் ஆலவிருட்சத்தின் விதை விதைக்கப்பட்டது(அடிக்கல் நாட்டப்பட்டது). அன்று முதல் மிகவும் சிறிய ஓலைக் குடிசையிலும் ஒட்டு வீட்டிலும், சில நேரங்களில் ஊண், உறக்கம் தவிர்த்தும் மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கிணங்க பணியாற்றிய தாயே! ஐயா அவர்கள் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற காலங்களிலும், ஜில்லா போர்டு உபதலைவர் பதவியில் பணி நிமித்தமாக பயணித்த காலங்களிலும், சுதந்திரத்திற்குப் பின் கதரபிவிருத்தி ஆணையாளராக பணியாற்றிய காலங்களிலும் நீங்கள் தனி ஒருவராக காந்திநிகேதனை கட்டிக்காத்து ஐயா அவர்களின் பணியை எளிமையாக்கிய இரும்பு பெண்மணியே!. ஐயா அவர்கள் மறைவிற்குப் பின்னரும் காந்திநிகேதனை வழிநடத்தினீர்கள். விருந்து உபசரிப்பில் தங்கள் தாயுள்ளத்தை விஞ்ச யாருமில்லை. நீங்கள் சென்னையில் வசிக்கும் போதும் உங்கள் பார்வையால் காந்திநிகேதனை பிரிந்தாலும் உங்களின் எண்ண அலைகள் காந்திநிகேதனிலேயே வசிக்கக் கண்டோம். வயது அதிகரிக்க அதிகரிக்க காந்திநிதேனை பற்றிய உங்கள் ஞாபக சக்தியும் அதிகரிக்கக் கண்டோம். வயது நூறைத் தாண்டிய போது இந்த மண்ணுலக வாழ்க்கை போதும் என்று எங்களை மறந்து (05.02.2017) விண்ணுலகிற்கு சென்று விட்டீர்களே? அம்மா! நீங்கள் உடலால் பிரிந்தாலும் உங்கள் ஆன்மா காந்திநிகேதனிலேயே உலாவுவதை உணர்கிறோம். உங்களின் பிரிவு எங்களை மீளாத் துயரில் ஆழ்த்தினாலும் உங்கள் ஆன்மா காந்திநிகேதன் என்னும் ஆல விருட்சத்தின் வேராக பல்லாண்டு வாழ வைக்கும் என்று நம்பிக்கை கொள்கிறோம்.

நீங்காத நினைவுகளுடன்....

எம்.முத்துக்குமார்,

கணினி ஆசிரியர்

# அதிசயம் ஆனால் உண்மை
## பாரதத்தின் பெருமைகள்

N.ரமணி சேகர்
பட்டதாரி ஆசிரியர்

- இறை வழிபாட்டிற்காக சாணிப்பிள்ளையார் பிடிப்பர். அந்த சாணிப்பிள்ளையாரில் புழு பிடிக்காது.
- சென்னிமலை முருகனுக்கு தயிராபிசேகம் செய்த தயிர் புளிக்காது.
- ரத்னகிரி முருகனுக்கு அபிசேகம் செய்யப்பட்ட பால் கணநேரத்தில் தயிராகும்.
- கும்பகோணம் திருநறையூர் நாச்சியார் கோயில் கருட வாகன சேவையின் போது கல்லினால் செய்யப்பட்ட கருடன் சிலையை முதலில் நான்குபேர் தூக்கி கிளம்புவர் பின் அதன் எடை படிப்படியாக அதிகரித்து 8,16,32,64 பேராக சேர்ந்து தூக்கும் அளவிற்கு அதிசயம் நடக்கிறது.
- சபரிமலை ஐயப்பன் திரு ஆபரணப்பெட்டியை எடுத்து செல்லும் போது, கருடன் தரிசனம் செய்யும்.
- சிக்கல் - சிங்கார வேலரின் கோவிலில் முருகன் அம்மாவிடம் வேல் வாங்கும் போது – முருகனின் திருமேனி முழுவதும் வியர்த்து அர்ச்சகரின் துண்டு முழுவதும் நனையுமாம்.
- குஜராத் பவநகரில் 1 ½ கீ.மீ தள்ளி உள்ள கடல் நீரில் மகாதேவர் உள்ளார். காலையில் கடல் உள் வாங்கி மக்கள் தரிசித்தவுடன் இரவில் சிவலிங்கத்தை மூழ்கச் செய்யும்.
- பத்ரிநாத் கோவிலில் நவம்பரில் நடைசாத்தும் போது ஏற்றி வைத்த விளக்கு தீபம் - மே மாதம் நடை திறக்கும் போதும் எரிந்து கொண்டே இருக்கும்.(6 மாத காலமாக)
- குளித்தலை அருகில் உள்ள ரத்னகிரி மலை மேல் காகங்கள் பறப்பதில்லை.
- மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குளத்தில் மீன்கள் வளராது.
- காசியில் கருடன் பறப்பதில்லை, பல்லிகள் சப்தமிடுவது இல்லை, பிணம் எரியும் போது வாடை இருப்பதில்லை, மலர்கள் மணப்பதில்லை, மாடு முட்டாது.
- இன்றும் திருவில்லிபுத்தூரில் சிவன்ராத்திரியன்று கொதிக்கும் எண்ணையில் கரண்டி இன்றி கை மூலம் வடை சுடுகிறார் ஒரு பாட்டி.

# நலம் தரும் கனி – எலுமிச்சை

மு.நாகராஜன்
முதுகலை வேதியியல் ஆசிரியா

இறைவழிபாடாக இருந்தாலும் சரி பெரியோரை வணங்கும் விருந்தோம்பலாக இருந்தாலும் சரி எலுமிச்சைக்கு தமிழர் அளித்திருக்கும் இடம் உயர்ந்தது.

சித்தர் தேரன் , மருந்து பாரதத்தில் , விடுகதையாக எலும்பிச்சை பழத்தை பற்றிய பாடலில் ,

மந்திரிக்கு மந்திரியாக ,
மன்னனுக்கு மன்னனாக ,
தந்திரிக்கு மித்திரனாக ……. எனப் பாடியுள்ளார்.

அதாவது மந்திரி எனும் “பித்தம்” அதிகரித்து வரும் நோய்க்கு அரசவையின் மந்திரி போல் சமயோசிதமாக உடலுக்கு வேறுபிரச்சனை ஏதும் வராமல் பக்க விளைவு இல்லாது தணிக்கும் ஆற்றலும்

உடலின் மன்னனான “ வாதத்தை “ சரியாக நிர்வகிக்கும் மன்னனாக இருப்பதும்

தந்திரமாக உடலில் சேரும் “ கபத்துக்கு “ மித்திரனாக (நண்பனாக ) இருந்து அதை வெளியேற்றும் இயல்பும் ……. என மூன்று பணிகளையும் செவ்வனே செய்யும் இந்த எலுமிச்சை என கவித்துவத்துடன் சொல்கிறார்.

மஞ்சள் வேம்பு போல எலுமிச்சைக்கும் நம் மருத்துவ மரபில் பெரும் பங்கு உண்டு . அத்தகைய எலுமிச்சையின் மகத்தான மருத்துவ குணங்களை நாமும் அறிந்து கொள்வோமாக

- நோய் எதிர்ப்பாற்றலுக்கு மிக அத்தியாவசியமான வைட்டமின் - C சத்து நிறைந்த கனி - எலும்பிச்சை
- வாந்தி , தலை சுற்றல் , இரத்தக் கொதிப்பு காரணமாக வரும் தலைவலி , மயக்கம் போன்ற பல பிரச்சனைகளுக்கும் இது அருமருந்து.
- எலுமிச்சம் பழத்தில் உள்ள தோலில் உள்ள ERIOCITRIN , HESPERIDIN, NARINGIN முதலிய FLAVONE GLUCOSIDES உடல் எடை குறைக்க , சர்க்கரை நோய் வராமல் தடுக்க , இரத்தக் கொழுப்பு குறைக்க என பல தொற்றா

வாழ்வியல் நோய்களில் பயன்படுவதை நவீன உணவு அறிவியல் உறுதிப்படுத்தியுள்ளது.

- எலுமிச்சைச்சாறு , கேன்சர் செல் வளர்ச்சியைத் தடுப்பதை பல ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.
- எலுமிச்சை ஹீமோதெரபியைக்காட்டிலும் பாதுகாப்பான கேன்சர் மருத்துவம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.
- கேன்சர் நோயாளிகள் , எலுமிச்சை சாற்றில் தேன் சேர்த்தோ , எலுமிச்சை சாறு கலந்த பச்சைத் தேநீரில் (Green Tea) தேன் சேர்த்தோ தங்களுக்கு பரித்துரைக்கப்பட்ட மருத்துவத்தோடு கூடுதலாகச் சாப்பிடலாம் .
- மன அழுத்தம் , மனச் சோர்வு , மனப்பிறழ்வு முதலிய பல மன நோய்களுக்கு பயனளிக்கும் மருத்துவ மூலிகை – எலுமிச்சை.
- எலுமிச்சம் பழம் சாற்றில் இலேசான அமிலம் இருந்தாலும் கூட அது எளிதில் ஜீரணித்து,உடலின் காரத் தன்மையை அதிகரிப்பதால் நோய்களைத் தவிர்க்க உதவும் .
- எலுமிச்சை சாறு ஒரு சிறந்த எதிர் ஆக்சிஜனேற்றி (anti Oxidant) எனவே இது இதய வால்வு தொடர்பான வியாதிகள் , புற்றுநோய் , கண்ணில் புரை ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு அளிப்பதோடு வயதாவதால் ஏற்படும் பாதிப்பையும் குறைக்கிறது.
- MOISTURIZER :- சில துளி தேங்காய் நீருடன் சிலதுளி எலுமிச்சை சாறு கலந்து முகம் மற்றும் கைகளில் தேய்த்தால் தோல் அழுக்கு நீங்கி தோல் பளபளக்கும்.
- BLEECHER :- நமது முழங்கை, கணுக்கால் பகுதிகள் பெரும்பாலும் கருப்பு நிறமாக இருக்கும் எலுமிச்சையின் பாதி பழத்தை அப்பகுதியில் அழுத்தி தேய்த்து வந்தால் கருப்பு நிறம் மாறும்.
- BLACKHEAD TREATMENT :- எலுமிச்சம் பழத்துண்டினை சாறுடன் முகத்தில் தேய்த்து சிறிது நேரம் கழித்து முகம் கழுவி வந்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் நிறம் வெளுக்கும்.

- ❖ TEETH WHITENER AND MOUTHWASHER:- எலுமிச்சைச்சாறுடன் சிறிது பேக்கிங் சோடா கலந்து பற்களில் தேய்த்த பின் பல் துலக்கினால் வாய் நாற்றம் நீங்கி பற்கள் பளிச்சிடும் .
- ❖ எலுமிச்சை சாறுடன் எண்ணெய் கலந்து பாத வெடிப்புகளில் தேய்த்து வந்தால் பித்த வெடிப்பு குறையும்.
- ❖ LIP EXFOLIATOR :- உலர்ந்த உதடு மற்றும் உதடு தோல் உரிதல் கொண்டவர்கள் , இரவு தூங்குவதற்கு முன் எலுமிச்சை சாறை உதட்டில் தேய்த்து கழுவி வர, காலையில் உதட்டில் உள்ள இறந்த தோல் செல்கள் நீங்கும், உதடு புதுப்பொலிவுடன் திகழும்.
- ❖ நல்லெண்ணையுடன் எலுமிச்சை சாறு கலந்து விரல் நக இடுக்குகளில் தினமும் பயன்படுத்தி வர விரல் நகங்கள் அழுக்கு நீங்கி, உலர்ந்து, மஞ்சள் நிற பொலிவுடன் இருக்கும்.
- ❖ தினமும் காலை ஒரு கப் எலுமிச்சை சாறுடன் நீர் கலந்து குடித்து வந்தால் கல்லீரலைத் தூண்டிவிடும். மேலும் உடலில் உள்ள நச்சுப்பொருளை சிறுநீர் வழியே வெளியேற்றும்.
- ❖ எலுமிச்சைச் சாறை நீருடன் பருகிவந்தால் இரத்தத்தில் கால்சியம் படிவதைத் தடுக்கும் சிறுநீரகக்கல் உண்டாவதைத் தடுக்கலாம்.
- ❖ எலுமிச்சை பானம் குடற்புழுக்களை அகற்றும்.
- ❖ உடலில் ஆக்சிஜன் பற்றாக்குறையால் மூச்சுத்திணறல் ஏற்படும் போது எலுமிச்சை பானம் பெரும் உதவியாக இருக்கும்.

இத்தகைய மருத்துவ குணமுடைய எலுமிச்சையை நமது காந்தி நிகேதன் ஆசிரம வளாகத்தில் சுமார் 1 ஏக்கர் பரப்பளவில் 100 எலுமிச்சை கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்படுகிறது. மேலும் இவற்றுக்கு வேதி உரமிடாமல் இயற்கை உரங்களை மட்டுமே 'ஆர்கானிக்' முறையில் பராமரிக்கப்படுவதால் இக்கனிகளில் சாறு அதிகமாகவும் சுவையுடையதாகவும் இருக்கும். விலை மலிவாகவும் இங்கு கிடைக்கிறது. எனவே நாம் அனைவரும் நமது வீட்டில் எலுமிச்சைக்கு முக்கிய இடம் கொடுத்து நமது உடலினை நோயிலிருந்து பாதுகாப்போமாக.

# அம்மா

**ச.வனிதா, XI-B**

மரணத்தை விட கொடுமையானது
உன் பிரிவு
சொர்க்கத்தை விட சுகமாது
உன் நினைவு
நான் காணும் காட்சிகள் அனைத்தும்
நீ தானே ! அம்மா !



கடல் இல்லாமல்
கரையில்லை
மலர் இல்லமால்
வித்துகள் இல்லை
உயிர் இல்லாமல்
உடல் இல்லை
நீ இல்லாமல் நான்
இல்லை அம்மா !

உலகினை பல முறை
சுற்றி பார்க்க முடியும்
ஆனால் தாயின் கருவறையை
ஒரு முறை தான் பார்க்கமுடியும் .

என் மரணம் கூட
என் அம்மாவுக்கு தெரியாமல்
பார்த்துக் கொள்வேன்
உன் கண்கள் கலங்கக் கூடாது என்பதற்காக .
கல்லறையில் நான் தூங்கும் வரைக்கும்
என் இதயத்தை விட்டு நீங்காது
என்றும் என்னுள் நீயே அம்மா!.

அம்மா !
கின்னத்தில் அன்னத்தை வைத்து
என் கன்னத்தை கிள்ளி
அன்னத்தை ஊட்டி விட நீ வருவாயென
காத்து இருக்கிறேன்,
மாலை அணிந்த உன் புகைப்படத்தின் முன்பு
அம்மா நீ எங்கே ???



ஆசிரம நிறுவனர் அமரர் கோ.வே. அவர்களின் துணைவியார் திருமதி.வே.மீனாட்சியம்மாள் அவர்கள் தமது 102 வது வயதில் 05.02.2017 அன்று இயற்கை எய்தினார். அவர்களின் மறைவு ஆசிரமத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய இழப்பாகும்.



Entercon நிறுவனத்தின் சார்பில் 10, 12 வகுப்பு மாணவர்களுக்கு அரசு பொதுத்தேர்வை எதிர்கொள்ளும் வகையிலான வழிகாட்டல் பயிற்சி வகுப்புகள் வகுப்பு வாரயாக வழங்கப்பட்டது.

## இஸ்ரோ ( I S R O ) வின் சாதனைப் பயணம்.........

T . ராஜ்குமார்
முதுகலை இயற்பியல் ஆசிரியர்

இஸ்ரோ (Indian Space Research Organisation ) எனப்படும் இந்திய விண்வெளி ஆய்வு மையம் 1969 ஆகஸ்டு 15 ம் நாள் துவங்கப்பட்டது. இதன் தலைமையகம் பெங்களூரு . இது உலகின் 6 வது பெரிய விண்வெளி ஆய்வு மையம் . இதுவரை 226 செயற்கை கோள்களையும் ( 180 – வெளிநாட்டு செயற்கை கோள்கள் உட்பட ) 55 ராக்கெட்டுகளையும் ( BSLV -39 ) விண்ணிற்கு அனுப்பியுள்ளது.

### செயற்கை கோள்கள்

| *செயற்கை கோள்* | - | | *ஏவப்பட்ட நாள்* |
|---|---|---|---|
| ஆர்யபட்டா | - | 1975 | ஏப்ரல் 19 |
| பாஸ்கரா | - | 1979 | ஜீன் 7 |
| ஆர் . டி . பி | - | 1979 | ஆகஸ்ட்10 |
| ஆர் . எஸ் 1 | - | 1980 | ஜீலை 18 |
| ஆர் . எஸ் . டி. 1 | - | 1981 | மே 31 |
| ஆப்பிள் | - | 1981 | ஜீன் 19 |
| பாஸ்கரா 2 | - | 1981 | நவம்பர் 20 |
| இன்சாட் 14 | - | 1982 | ஏப்ரல் 10 |
| ஆர் . எஸ் . டி. 2 | - | 1983 | ஏப்ரல் 17 |
| இன்சாட் 1 பி | - | 1983 | ஆகஸ்டு 30 |
| ஸ்ராஸ் 1 | - | 1987 | மார்ச் 24 |
| ஐ . ஆர் . எஸ் 1 ஏ | - | 1988 | மார்ச் 17 |
| ஸ்ராஸ் 2 | - | 1988 | ஜீலை 13 |
| இன்சாட் 1 சி | - | 1988 | ஜீலை 22 |
| இன்சாட் 1 டி | - | 1990 | ஜீன் 12 |
| ஐ . ஆர் . எஸ் 1 டி | - | 1991 | ஆகஸ்டு 29 |
| ஸ்ராஸ் - சி | - | 1992 | மே 20 |
| இன்சாட் 2 ஏ | - | 1992 | ஜீலை 10 |
| இன்சாட் 2 பி | - | 1993 | ஜீலை 23 |
| ஐ . ஆர் . எஸ் 1 இ | - | 1993 | செப்டம்பர் 20 |
| ஸ்ராஸ் - சி 2 | - | 1994 | மே 04 |
| ஐ . ஆர் . எஸ் - பி 2 | - | 1994 | அக்டோபர் 15 |
| இன்சாட் 2 சி | - | 1995 | டிசம்பர் 07 |
| ஐ . ஆர் . எஸ் - 1 சி | - | 1995 | டிசம்பர் 28 |
| ஐ . ஆர் . எஸ் - பி 3 | - | 1996 | மார்ச் 21 |

| | | | |
|---|---|---|---|
| இன்சாட் 2 D | - | 1997 | ஜீன் 04 |
| ஐ . ஆர் . எஸ் - 1 D | - | 1997 | செப்டம்பர் 29 |
| இன்சாட் 2 சி | - | 1999 | ஏப்ரல் 03 |
| ஐ . ஆர் . எஸ் - பி 4 | - | 1999 | மே 26 |
| இன்சாட் 3 பி | - | 2000 | மார்ச் 22 |
| ஜி . சாட் | - | 2001 | ஏப்ரல் 10 |
| டி . இ . எஸ் ( TES) | - | 2001 | அக்டோபர் 10 |
| இன்சாட் 3 C | - | 2002 | ஜனவரி 24 |
| மெட் சாட் | - | 2002 | செப்டம்பர் 12 |
| இன்சாட் 3 A | - | 2003 | ஏப்ரல் 10 |
| ஜி . சாட் - 2 | - | 2003 | மே 08 |
| இன்சாட் 3 E | - | 2003 | செப்டம்பர் 28 |
| ஐ . ஆர் . எஸ் - பி 6 | - | 2003 | அக்டோபர் 17 |
| எ ஜீ சாட் | - | 2004 | அக்டோபர் 20 |
| ஹேம் சாட் | - | 2005 | மே 5 |
| கார் டோ சாட் - 1 | - | 2005 | மே 5 |
| இன்சாட் 4 A | - | 2005 | டிசம்பர் 22 |
| இன்சாட் 4 C | - | 2006 | ஜீலை 10 |
| கார் டோ சாட் - 2 | - | 2007 | ஜனவரி 10 |
| எஸ் ஆர் சி 1 | - | 2007 | ஜனவரி 10 |
| இன்சாட் 4 B | - | 2007 | மார்ச் 12 |
| இன்சாட் 4 C R | - | 2007 | செப்டம்பர் 02 |
| கார் டோ சாட் - 2 A | - | 2008 | ஏப்ரல் 28 |
| ஐ . எம் . எஸ் 1 | - | 2008 | ஏப்ரல் 28 |
| சந்திராயன் 1 | - | 2008 | அக்டோபர் 22 |
| ரி சாட் - 2 | - | 2009 | ஏப்ரல் 20 |
| அனுசாட் | - | 2009 | ஏப்ரல் 20 |
| ஐ . ஆர் . எஸ் - பி 4 | - | 2009 | செப்டம்பர் 23 |
| ஜி சாட் 4 | - | 2010 | ஏப்ரல் 15 |
| கார் டோ சாட் - 2 பி | - | 2010 | ஜீலை 12 |
| ஸ்டட்சாட் | - | 2010 | ஜீலை 12 |
| ஜி சாட் / 5 p $ இன்சாட் 4 D | - | 2010 | டிசம்பர் 25 |
| ரிசோர்ஸ் சாட் 2 | - | 2011 | ஏப்ரல் 20 |
| யூத்சாட் | - | 2011 | மே 21 |
| ஜி சாட் 8 / இன்சாட் 4 G | - | 2011 | மே 21 |
| ஜி சாட் 12 | - | 2011 | ஜீலை 15 |
| மெகா டிராபிக்கியுஸ் | - | 2011 | அக்டோபர் 12 |
| எஸ் . ஆர் . எம் . சாட் | - | 2011 | அக்டோபர் 12 |

| | | | |
|---|---|---|---|
| ஜீக்னு | - | 2011 | அக்டோபர் 12 |
| ரி சாட் 1 | - | 2012 | ஏப்ரல் 26 |
| ஜி சாட் 10 (4) | - | 2012 | அக்டோபர் 29 |
| சாரல்(5) | - | 2013 | பிப்ரவரி 25 |
| ஐ . ஆர் . என் . எஸ் . எஸ்1 A(66) | - | 2013 | ஜீலை 1 |
| இன் சாட் 3D (7) | - | 2013 | ஜீலை 26 |
| ஜி சாட் 7(8) | - | 2013 | ஆகஸ்ட் 30 |
| MDM | - | 2013 | நவம்பர் 05 |
| ஜி சாட் 14 | - | 2014 | ஜனவரி 15 |
| ஐ . ஆர் . என் . எஸ் . எஸ்1 B (9) | - | 2014 | ஏப்ரல் 04 |
| ஐ . ஆர் . என் . எஸ் . எஸ்1 C (10) | - | 2014 | அக்டோபர் 16 |
| ஜி சாட் 16 | - | 2014 | டிசம்பர் 7 |
| ஐ . ஆர் . என் . எஸ் . எஸ்1 D | - | 2015 | மார்ச் 28 |
| ஜி சாட் 6 | - | 2015 | ஆகஸ்ட் 27 |
| அஸ்ட் ரோ சாட் | - | 2015 | செப்டம்பர் 28 |
| ஜி சாட் 15 | - | 2015 | நவம்பர் 11 |
| ஐ . ஆர் . என் . எஸ் . எஸ்1 E | - | 2016 | ஜனவரி 20 |
| ஐ . ஆர் . என் . எஸ் . எஸ்1 F | - | 2016 | மார்ச் 10 |
| ஐ . ஆர் . என் . எஸ் . எஸ்1 G | - | 2016 | ஏப்ரல் 28 |
| கார் டோ சாட் - 2 C | - | 2016 | ஜீன் 22 |
| இன் சாட் 3DR | - | 2016 | செப்டம்பர் 08 |
| ஸ் காட் சாட் 1 | - | 2016 | செப்டம்பர் 26 |
| கார் டோ சாட் - 2 D | - | 2017 | பிப்ரவரி 15 |

**ராக்கெட்டுகள் :-**

| | | |
|---|---|---|
| எஸ் . எல் . வி - 3 | - | 04 ராக்கெட்டுகள் |
| ஏ . எஸ் . எல் . வி | - | 04 ராக்கெட்டுகள் |
| பி . எஸ் . எல் . வி | - | 39 ராக்கெட்டுகள் |
| ஜி . எஸ் . எல் . வி | - | 08 ராக்கெட்டுகள் |

'இஸ்ரோ' ஒரே ராக்கெட்டில் 104 செயற்கை கோள்களை அனுப்பி உலக சாதனை படைத்துள்ளது . இதற்கு முன் ரஷ்ய விண்வெளி நிறுவனம் 2014 ல் ஒரே ராக்கெட்டில் 37 செயற்கை கோள்களை அனுப்பியது. அமெரிக்கா விண்வெளி மையமான 'நாசா' 2013 ல் 29 செயற்கை கோள்களை அனுப்பியது . இந்திய விண்வெளி ஆய்வு மையமான ' இஸ்ரோ' 2016ல் அதிகபட்சமாக 20 செயற்கை கோள்களை ஒரே ராக்கெட்டில் அனுப்பியது.

தொடரட்டும் இஸ்ரோவின் வரலாற்று சாதனைப் பயணம்.......

## திருவள்ளுவர் எழுதிய நான்கடி பாடல்

பா. ரேணுகா தேவி

தமிழாசிரியை

உலகத்தில் உள்ள அத்தனை ஜீவன்களுக்காகவும் ஒன்றரை அடியில் குறள் எழுதிய திருவள்ளுவர்_ஒரே ஒரு ஜீவனுக்காக மட்டும் நான்கடியில் ஒரு பாட்டு எழுதி உள்ளார் தெரியுமா!

யார் அந்த பெருமைக்குரிய ஜீவன்?

அந்த பெருமைக்குரியவர் அவரது மனைவி வாசுகி தான். அந்த அம்மையார் தனது கணவரின் செயல்பாடுகள் குறித்து வாழ்நாள் முழுவதும் விமர்சித்ததே இல்லை. அவர் செய்தால் எல்லாம் சரியாகத்தான் இருக்கும் என்று நினைத்தார்.

தன் கணவர் சாப்பிடும் போது ஒரு கொட்டாங்குச்சியில் தண்ணீரும், ஒரு ஊசியும் வைத்துக் கொண்டு தான் சாப்பிடுவாராம். அது ஏன் என்று அம்மையாருக்கு விளங்கவே இல்லையாம்.

ஆனால் கணவரிடம் காரணத்தை எப்படிக் கேட்பது என்று அமைதியாக இருப்பாராம். இதற்கான காரணத்தை அந்த அம்மையார் இறக்கும் தருவாயில் தான் கணவரிடம் கேட்டாராம். சோற்றுப் பருக்கை கீழே சிந்தினால் ஊசியில் குத்தி கொட்டாங்குச்சியில் உள்ள நீரில் கழுவி மீண்டும் சோற்றில் கலந்து உண்ணவே அவை இரண்டும் என்றாராம்.

நீ பரிமாறுகையில் சோற்றுப் பருக்கை சிந்தவே இல்லை. அதனால் அதன் பயன்பாடு உனக்குத் தெரியவில்லை என்று நெகிழ்ச்சியாகச் சொன்னாராம்.

வள்ளுவரின் இல்லத்துக்கு துறவி ஒருவர் வந்தார் அவர்கள் இருவரும் பழைய சாதம் சாப்பிட்டனர். அப்போது வள்ளுவர் வாசுகியிடம் சோறு சூடாக இருக்கிறது விசிறு என்றார். பழைய சாதம எப்படி சூடும்? ஏன்று அந்த அம்மையார் கேள்வியே கேட்க வில்லை விசிற ஆரம்பித்து விட்டார். கணவரிடம் வாதம் செய்யாமல் விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவம் கொண்டிருந்தார்.

அந்த கற்புக்கரசி ஒருமுறை கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தார்.

வள்ளுவர் அவரை அழைக்கவே கயிறை அப்படியே விட்டு விட்டு வந்தார். குடத்துடன் கூடிய அந்தக் கயிறு அப்படியே நின்றதாம். இப்படி ஒரு மனைவி கிடைத்தால் அந்தக் கணவன் கொடுத்து வைத்தவன் தானே!

அந்த அன்பு மனைவி ஒருநாள் இறந்து போனார்.

“நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்
பெருமை படைத்து இவ்வுலகு”

என ஊருக்கே புத்தி சொன்ன அந்தத் தெய்வப் புலவரே மனைவியின் பிரிவைத் தாங்காமல் கலங்கி விட்டார்.

“நேற்றிருந்தவர் இன்றைக்கு இல்லை என்பது தான் இந்த உலகத்திற்கே பெருமை “ என்பது இந்தக் குறளின் பொருள். ஆக தனது கருத்துப்படி அந்த அம்மையாரின் மறைவுக்காக பெருமை பட்டிருக்க வேண்டிய அவர் மனைவியின் பிரிவை தாங்க முடியாது நாலு வரியில் ஒரு பாட்டெழுதினார்.



“அடியிற்கினியாளே , அன்புடையாளே ,
படிசொல் தவறாத பாவாய் , அடிவருடி
பின்தூங்கி முன்னெழும்பும் பேதாய்
இனிதாய் என் தூங்கும் என்கண் இரவு”.

அடியவனுக்கு இனியவளே! அன்புடையவளே! என் சொல்படி நடக்கத் தவறாத பெண்ணே ! என் பாதங்களை வருடி தூங்கச் செய்தவளே ! பின் தூங்கி முன் எழுபவளே! பேதையே ! என் கண்கள் இனி எப்படித்தான் இரவில் தூங்கப் போகிறதோ ! என்பது தான் இந்தப்பாட்டின் உருக்கமான பொருள்.

இன்று சிறுசிறு கருத்து வேறுபாடுகளுக்கு கூட நீதிமன்ற வாசலில் நிற்கும் தம்பதியர் இந்த சம்பவத்தை மனதிற்குள் அசைபோடுவார்களா…..!!

இக்கருத்து, செய்தி , பாடல் இவை அனைத்தும் நம்மில் பலரும் அறியாத , கேட்காத , தெரிந்திராத செய்தி . நான் படித்ததில் எனக்குப் பிடித்தத செய்தி இது.

“ வெற்றியோ , தோல்வியோ , எதுவரினும்
கடமையைச் செய்வோம் ,
யார் பாராட்டினாலும் , பாராட்டாவிட்டாலும்
கவலை வேண்டாம்,
நமது திறமையும் , நேர்மையும் வெளியாகும் போது
பகைவனும் நம்மை மதிக்கத் தொடங்குவான்” .

## HABIT OF READING

J.KRISHNA DEEPA
B.T Asst [ENGLISH]

"Reading Maketh a full man;
Conference a ready man;
Writing an exact man."

This is a very popular statement of Francis Bacon. This tells us the importance of reading books. Man should devote one or two hours a day for reading. It may be for gaining knowledge or for fun, or for spending leisure time in a proper way. Reading is a very useful hobby because it gives us peace of mind and pleasure. A question may arise namely, "what kind of books should be chosen to read.'?

There is no particular rule No body dictates us to read a particular book. The reader has complete freedom to select the book of his choice. Due to the wonderful technological improvement in printing; we can see Thousands of books on all subjects printed elegantly. The present day book exhibition is a feast to the eyes. There are books on philosophy, history, religion, music, art, literature law, Science and Technology, engineering, Computer, Banking, economics and Agriculture and mass communication.

There is no end, so a person can choose the book according to his/ her interest and capacity to understand the contents of the book. Instead of wasting the valuable leisure time in useless talk, one should pursue a hobby of his own/her own. It has both educative and cultural value. It gives a stimulus to life of an individual.

## தொழிற்கல்வி

அ.திவ்யா, VII-E

### முன்னுரை

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்றார் பெருங்கவி பாரதி . வினையே ஆடவர்க்கு உயிர் என்பது சான்றோர் கூற்று இவை தொழிலின் சிறப்பை விளக்குவதாகும். இத்தொழிலினைப் பயிற்றுவிக்கும் கல்வி பற்றி இங்குக் காண்போம்.

### பண்டைய தொழிற் கல்வி

அண்மைக் காலம் வரை தொழிலானது பரம்பரைத் தொழிலாகவே இருந்து வந்துள்ளது. தனியாக அத்தொழிலைக் கற்பிக்கக் கல்லூரியோ பள்ளியோ இருந்ததில்லை தந்தையின் தொழிலை மகன் கற்றுவந்தான் இங்ஙனம் கற்கப்பெற்ற தொழிலால் சாதியும் ஏற்பட்டது. அது



மட்டுமன்று ஒரு சாதியார் செய்த தொழிலால் சாதியும் ஏற்பட்டது. அது மடடுமன்று ஒரு சாதியார் செய்த தொழிலை அடுத்த சாதியும் ஏற்பட்டது. அது மட்டுமன்று ஒரு சாதியார் செய்த தொழிலை அடுத்த சாதியார் செய்ய இயலாத நிலையும் ஏற்பட்டது.

### இன்றைய நிலை

மாணவர் பல ஆண்டுகள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கல்வி கற்கின்றனர். பட்டத்தைப் பெறுகின்றனர். அதன பயன் யாதுடு ஏதேனும் ஒரு பணியில் அமர்வதற்குத் தக்கவராக உள்ளனர். தொழில் செய்யும் திறத்தை அவர் அறியார். உத்தியோகம் ஒன்று கிடைக்கவில்லை. என்றால் அவர்களுக்கு வாழ்க்கை கசந்து போய்விடும் இந்தக் கல்வி முறை ஆங்கிலேயர் வகுத்தது. அவர்களுக்குத் தங்களுக்குப் பணி செய்ய ஆள் வேண்டியிருந்தது. தேற்கேற்ற கல்வியை அவர்கள் புகுத்தினர் ஆனால் நாம் இன்று சுதந்திரம் பெற்றுவிட்டோம். நம் நாட்டின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறோம். ஏனவே கல்வியில் மாற்றம் தேவைப்பட்டது. நம் அரசு கல்விமுறையை மாற்றிக் கொண்டு வருகின்றது.

**பல வகைக் கல்வி**

இன்றையக் கல்வி பலவகையில் பரந்துபட்டுள்ளது. பொறியியல் கல்லூரிகள் பொறியியல் பள்ளிகள் என்பன போன்று நாள் தோறும் பெருகி வரும் தொழில்கள் பல அவற்றுக்கும் கல்வியமைப்புத் தேவைப்படும் கம்ப்யூட்டர் ரோபோ முதலிய பொறியியல் முன்னேற்றம் பற்றி அறியார் இலர்.



**நம்நிலை**

இன்றைய நிலையில் அறிவியல் துறையில் நம் நாடு மிகவும் பின்தங்கியுள்ளது. காலஞ்சென்ற தலைமை அமைச்சர் இராஜீவ் காந்தி அவர்கள் முன்னேறிய அறிவியல் தொழில் நுணுக்கத்தை நம் நாட்டவர் பின்பற்றவில்லை என்று வருந்தி முன்னேறும் தொழில் நுணுக்க அறிவியலை நம் நாட்டில் புகுத்தமுயன்றார். அதற்காகப் புதிய கல்வியைக் கொண்டுவரவும் எண்ணினார் புதியகல்விக் கொள்கையைப் புகுத்தக் கல்வி அறிஞர் பலர் ஆராய்ந்துவருகின்றனர் னேபதில் ஐயமில்லை

**பயன்கள் பல**

தொழிற்கல்வியின் பயனை அளவட்டுரைக்க இயலாது. ஊடலை வளர்க்க உணவு தேவை. ஆந்த உணவைத் தரத்தொழில் தேவை. ஒரு நாட்டை வளப்படுத்துவதும் வலிமைப்படுத்துவதும் தொழிலே1 அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மணி, பிரான்சு, இங்கிலாந்து முதலிய நாடுகளின்முன்னேற்றதிற்குக் காரணம் தொழில் முன்னேற்றமே.

**வேலையில்லாமை நீங்க வழி**

வேலையில்லாத் திண்டாட்டம் நம் நாட்டை அரிந்து வரும் ஒரு பிரச்சினை தொழிற் கல்வியை ஒருவன் பெற்றிருந்தால் அவன் வேலை தேடிஅலைய வேண்டியதில்லை தானே தொழிலைத் தொடங்கலாம் தானே உரிமையுடன் வாழலாம் இத்தகைய கல்வியைத் தொடக்கப்ப ள்ளியிலிருந்தே தொடங்கலாம் என அறிஞர் எண்ணுகின்றனர்.

கைத்தொழில் ஒன்றைக்கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக் கொள் என்றார் கவிஞர் இராமலிங்கனார் எனவே நம் மக்கள் தொழிற்கல்வியைக் கற்று நம் பொருள் நிலையை வளர்த்து நாட்டின் பொருள் நிலையையும் வளர்ப்பாராக

## மின்னணு பணப்பரிமாற்றம் – அறிமுகம்

எம்.முத்துக்குமார், கணினி ஆசிரியர்

மனித நாகரிகம் தொடங்கிய காலத்தில் மக்கள் தங்களின் சொந்தப் பயன்பாட்டுக்கே பொருட்களை உற்பத்தி செய்தனர். பொருட்கள் பண்மதிப்பு ( Use Value ) மட்டுமே கொண்டிருந்தன நாளடைவில் சிலர் தேவைக்கு அதிகமாகவும் உற்பத்தி செய்தனர் . அவர்களுக்குத் தேவையான சில பொருட்களை வேறு சிலர் உற்பத்தி செய்யக்



கண்டனர் எனவே உற்பத்திப் பொருட்கள் சந்தைக்கு வந்தன. உற்பத்திப் 'பொருட்களுக்குப் புதிதாகப் பரிவர்த்தனை மதிப்பு' ( Exchange Value ) ஏற்பட்டது. பொருள் ' பண்டம்' ( Commodity ) ஆயிற்று 'பண்ட மாற்று' புழக்கத்துக்கு வந்தது. பரிவர்த்தனை மதிப்பைக் கணக்கிடுவதில் இருந்த சிக்கலைத் தீர்க்கப் 'பணம்' அறிமுகப்படுத்தப்பட்டது. அனைத்துப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகளையும் நிர்ணயிக்கும் சர்வப் பொதுவான பண்டமாய் 'பணம்' விளங்கலாயிற்று பணம் பல வடிவங்களை எடுத்தது நாளைடவில் நவீனத் தொழில்நுட்ப வளர்ச்சி பணத்திலும் , பணம் செலுத்தும் முறையிலும் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது கணிப்பொறியும், கணிப்பொறிப் பிணையங்களும் மின்னணுத் தகவல் பரிமாற்றத்தை சாத்தியமாக்கின. இணையம் உருவானது மின்வணிகம் வளர்ந்தது பழைய பணம் செலுத்து முறைகள் பயனற்றுப் போயின. நவீனப் பணம்செலுத்து முறைகள்அறிமுகம் ஆயின. மின்னணுப் பணப் பரிமாற்றம் நடைமுறைக்கு வந்தது.

தாள் வடிவிலான பணத்தை அச்சிடுவதிலும் புழங்க விடுவதிலும் பாது காப்பதிலும் கையோடு எடுத்துச் செல்வதிலும் . கள்ளநோட்டுகளைக் கட்டுப்படுத்துவதிலும் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. நாளுக்கு நாள் அத்தகைய சிக்கல்கள் வளர்ந்து வருகின்றன தாள்வழிப் பணப்பரிமற்றத்துக்கு மாற்றாக 'அட்டைவழிப் பணப் பரிமாற்றம்' அறிமுகப்படுத்தப்பட்டது. கடன் அட்டை, பற்று அட்டை எனப் பல்வேறு அட்டைகள் பழக்கத்துக்கு வந்தன. தாள்வடிவப் பணப் புழக்கத்தில் இருந்த பலவீனங்கள் பலவும் அன்டைவழிப் பணப் பழக்கத்தில் களையப்பட்டன. எனினும் இதற்கே உரிய பிரச்சனைகள் சிலவற்றை எதிர்கொள்ளச் சட்டப் பாதுகாப்பு தேவைப்பட்டது. முன்னோடியாக அமெரிக்க ஐக்கிய நாடு மின்னணுப் பணப் பரிமாற்றச் சட்டத்தை நிறைவேற்றியது.

இந்தியாவிலும் மின்னணுப் பணப்பரிமாற்றம் பல வடிவங்களில் வளர்ச்சி கண்டு அதனை ஒழுங்குபடுத்த இந்திய ரிசர்வ் வங்கி முன்முயற்சி எடுத்து தேசிய மின்னணுப்பணப்பரிமாற்ற முறையை உருவாக்கியது. இந்திய வங்கிகள் அதில் பங்கெடுத்து மின்னணுப்பணப் பரிமாற்றம் தற்போது பெரும் வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கின்றன.

# பயனுள்ள தகவல்

சு. இராகவன்
பட்டதாரி ஆசிரியர்




அவசியம் அனைவரும் அலைபேசியில் பதிந்து வைத்திருக்க வேண்டிய எண்கள்

| | | |
|---|---|---|
| 1. அவசர உதவி அனைத்திற்கும் | - | 911 |
| 2. வங்கி திருட்டு உதவிக்கு | - | 98408 14100 |
| 3. மனித உரிமைகள் ஆணையம் | - | 044 – 22410377 |
| 4. மாநகர பேருந்தில் அத்துமீறல் என்றால் | - | 0938 3337639 |
| 5. போலீஸ் உதவிக்கு SMS | - | 9500099100 |
| 6. போலீஸ் மீது ஊழல் புகாருக்கு SMS | - | 9840983832 |
| 7. போக்குவரத்து விதிமீறல் உதவிக்கு | - | 9840000103 |
| 8. அவசரத்திற்கு போலீஸ் | - | 100 |
| 9. தீயணைப்புத்துறை உதவிக்கு | - | 101 |
| 10. போக்குவரத்து விதிமீறலுக்கு | - | 103 |
| 11. விபத்து என்றால் உதிவி | - | 100,103 |
| 12. ஆம்புலன்ஸ் உதவிக்கு | - | 102 மற்றும் 108 |
| 13. பெண்களுக்கான அவசர உதவிக்கு | - | 1091 |
| 14. குழந்தைகளுக்கான அவசர உதவிக்கு | - | 1098 |
| 15. அவசர காலம் மற்றும் விபத்துக்கு | - | 1099 |
| 16. முதியோர்களுக்கான அவசர உதவிக்கு | - | 1253 |
| 17. தேசிய நெடுஞ்சாலையில் அவசர உதவிக்கு | - | 1033 |
| 18. கடலோர பகுதி அவசர உதவிக்கு | - | 1093 |
| 19. இரத்த வங்கி அவசர உதவிக்கு | - | 1910 |
| 20. கண் வங்கி அவசர உதவிக்கு | - | 1919 |
| 21. விலங்குகள் பாதுகாப்புஉதவிக்கு | - | 044 – 22354959, 22300666 |

22. நமது அலைபேசியில் 911 என்ற எண் மட்டும் எந்த நிலையிலும் எப்போதுமே எல்லா மாநிலம், எல்லா தேசத்திலும் இயங்கும். நமது அலைபேசி Lock ல் இருந்தாலும் இந்த எண்கள் மட்டும் இயங்கும். இது அவசரமான அனைத்து உதவிக்கும் உதவி எண் ஆகும்.



# வானவில்

கோ.விஜயலட்சுமி, IX-B

**முன்னுரை –**

இயற்கையின் படைப்புகளின் விந்தையானது வானவில். அதன் வண்ணங்கள் நம் கண்களையும் மனதையும் கவர்ந்து இழுக்கின்றன. காலை ,மாலை நேரங்களில் தோன்றும் அதன் அழகை வயது வரம்பின்றி அனைவரும் ரசித்து மகிழ்வர் .

**தோன்றக் காரணம்–**

பழங்கால மக்கள் வானவில்லை "இந்திரன் வில்" என்று அழைத்தனர் .வானவில் மழைக்காலங்களில் பகலில் தென்படும் சூரியன் இருக்கும் திசைக்கும் எதிர் திசையில் தோன்றும். காலையில் மேற்கிலும் , மாலையில் கிழக்கிலும் தோன்றும்.சிதறும் மழைத்துளிகளின் மீது சூரிய ஒளி ஏழு நிறங்களாக பிரிந்து வானவில்லாக காட்சியளிக்கிறது. அவற்றின் சிவப்பு நிறம் குறைந்த ஒளிவிலகலையும்.ஊதாநிறம் அதிகமான ஒளிவிலகலையும் அடைகின்றன. கதிரவன் மறையும் போது நீண்ட வானவில் தோன்றும். வானத்தில் இருந்து பார்க்கும் போது வானவில் வட்டவடிவில் காட்சி அளிக்கும்.

**ஏழு வண்ணங்கள் -**



வானவில்லில் சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், கரு நீலம், ஊதா என்ற ஏழு வண்ணங்கள் தோன்றும் இதையே ஆங்கிலத்தில் Vibgyor என்று அழைப்பர் சில சமயங்களில் இரு வானவில்களாக காட்சி தரும். அவற்றில் ஒன்றை தலை வானவில் என்றும் மற்றொன்றை துணை வானவில் என்றும் அழைப்பர்.

**முடிவுரை –**

மழை நின்ற சமயத்தில் வானவில் தோன்றும் இதைப் பார்க்கும் சிறுவர்கள் ஆடிப்பாடி, மகிழ்வர், பெரியவர்கள் வானவில்லை உற்று நோக்கி ரசிப்பார்கள். பொதுவில், அனைவரையும் மகிழ்விக்கும் இயற்கையின் விந்தையே வானவில்.

# ஊனமுற்றோரின் மறுவாழ்வு

**எஸ்.புனிதலட்சுமி-XI-B**

முன்னுரை –

உலக மக்கள் தொகையில் ஏறத்தாழ பத்து விழுக்காடு ஊனமுற்றோர் என புள்ளி விவரம் காட்டுகிறது இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 41-ஆம் பிரிவு ஊனமுற்றோர்க்கு அரசு உதவி புரிதல் குறித்து வற்புறுத்துகிறது. ஐ.நா சபையும் ஊனமுற்றோரின் நலனுக்காக உதவி புரிந்து வருகிறது . உடலால் ஊனம் பெற்றிருந்தாலும் அறிவாலும் ,ஆற்றலாலும் அவர்கள் ஞானம் பெற்றுத் திகழ வேண்டும் என்பதே அரசின் விருப்பம்.

கல்வியும் தொழிலும் -

கண்பார்வையற்றோர்க்கென அரசு பல பள்ளிகளை நடத்தி வருகிறது . அவர்கள் படித்து அறிவதற்கென தனிப்பட்ட நூல்கள் வெளியிடப்படுகின்றன பிரெய்லி எழுத்து முறையால் அவர்கள் எழுத்துக்களை தடவி அறிந்து படிக்க இயலுகிறது. ஊமையர் , செவிடர்களுக்கு எனத் தனிப் பள்ளிகளை அரசு நடத்துகிறது . அவர்கள் பேசும் பயிற்சியும் , கேட்கும் பயிற்சியும் பெற்று வருகின்றனர் கண்பார்வை அற்றோர்க்குப் பொது தொலை பேசி நிலையங்களில் தொடர்புப் பணி அளிக்கப்படுகிறது 1 முதல் 4 விழுக்காடு வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஊனமுற்றோர்க்கு பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றது.

ஊனமுற்றோரின் உயர்வு -

மாரியப்பன் தங்கவேலு என்பவர் நீளம் தாண்டுதலில் 2016 –ல் தங்கப் பதக்கம் வாங்கி நம் நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார் இவருக்கு ஒரு கால் கிடையாது இருந்தாலும் ஒலிம்பிக்கில் வெற்றி பெற்றுள்ளார், ஆகவே ஊனம் கருதி சோர்ந்து விடாமல் முயற்சியுடன் உழைத்து கருதி சோர்ந்து விடாமல் முயற்சியுடன் உழைத்து உயர வேண்டும்.

“பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து

ஆள்வினை இன்மை பழி” என்று வள்ளுவர் கூறுகிறார்.

முடிவுரை –

அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது அதிலும் கூன் , குருடு , செவிடு இன்றிப்பிறத்தல் அரிதனும் அரிது ! என்று கூறியுள்ளார் ஔவை மூதாட்டியார்.

# டாக்டர் . A.B.J அப்துல் கலாம் கவிதை

கல்வி கற்றோரோ பலர்
கல்வி கல்லாதவரோ சிலர்
ஆனால் சிந்திக்க வைத்தவர் ஒருவர்

அவர் தான் டாக்டர் A.B.J அப்துல் காலம்



உன் அன்பில் விசித்திரம்
நம் நட்பின் சித்திரம்
அப்துல் கலாமின் சரித்திரம்

ஒரே ஒரு பூமி
ஒரே ஒரு உலகம்
ஒரே ஒரு அறிஞர்

அவர் தான் டாக்டர் A.B.J அப்துல் கலாம்

இரவில் வெளிச்சமாய் இருப்பது நிலவு
பகலில் வெளிச்சமாய் இருப்பது சூரியன்
எப்பொழுதும் வெளிச்சமாய் இருப்பவர் அப்துல் கலாம்



செடியில் இருப்பதோ மொட்டு
அதிலிருப்பதோ தேன் சொட்டு
அது தான் அப்துல் காலமின் ராக்கெட்டு

பூக்களோ பல வகை
மனிதனோ இரண்டு வகை
அறிஞரோ ஒரு வகை

அவர் தான் டாக்டர் A.B.J அப்துல் கலாம்

எல்லோரும் கடவுளை விநாயகனே என்று சொல்வார்கள்
அப்துல் கலாமை ஏவுகனை நாயகனே என்று சொல்வார்கள்

# காலம் பொன் போன்றது

ச.சங்கரேஸ்வரி–VII-E

**முன்னுரை –**

காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்கிறது பழமொழி ஒன்று எந்த ஒரு செயலையும் காலத்தே செய்ய வேண்டும் என்பதற்காகக் கூறுப்பட்டதே அது காலத்தின் அருமையை மக்கள் உணர வேண்டும். முதுமையில் தளர்ச்சி தள்ளாமை அனைத்தும் மனிதர்க்கு வந்துவிடும் அதானல் இளமைப்பருவத்தில் காலத்தை வீணாக்குதல் கூடாது.

**பருவத்தை பயிர்செய் –**

இளமைப் பருவம் கல்விக்குரியது. அப்பருவத்தை யாரும் வீண் செய்தல் கூடாது ஐந்தில் வளையாது ஐம்பதில் வளையாது. காலத்தை தவறவிட்டு பின் வருந்தக்கூடாது. “இளமையில் கல் பருவத்தே பயிர் செய்” என்கிற பழமொழியை மாணவர்கள் நன்றாக மனதில் பதிய வைத்துக் கொள்ளல் வேண்டும்.

மழைக்காலத்தில் விதைக்க வேண்டும் . அப்போதுதான் பயிர் நன்றாக வளர்ந்து தக்க பலனைத் தரும். விதைக்க வேண்டிய காலத்தில் விதைக்காமல் அறுவடைக்கு மட்டும் சென்றால் எதுவும் கிடைக்காது அல்லவா ?

**காலம் மீண்டும் வராது –**

‘அழுது புரண்டாலும் அணைதாண்டிய வெள்ளம் மீண்டுவராது’ என்ற பழமொழியைப் போல தவறவிட்ட காலமும் மீண்டும் வராது . இதனை மனதிற்கொண்டு அதைப்பயன்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு நாட்டிலும் சாதனையாளராகத் திகழ்ந்தவர்களெல்லாம் காலத்தை சிறப்பாகப் பயன்படுத்தியவர்களே. நம் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் குறித்த காலத்தில ் வேலையைச் செய்து முடிக்கும் பழக்கம் கொண்டவராக இருந்தார் அதனால் தான் அவரால் இந்தியாவை குடியரசு நாடாக மாற்ற இயன்றது.

பொழுதுபோக்கு என்ற பெயரில் அருமையான காலத்தை தேவையற்ற காரியங்களில் வீணாக்கக் கூடாது. வெறுமனே அரட்டையடித்துக் கொண்டிருத்தல், உறங்குதல், சூதாடுதல், தொலைக்காட்சி கண்டுகளித்தல், போன்றவைகளில் ஈடுபடக் கூடாது நல்ல நூல்களைக் கற்றோ, ஏதேனும் கைத்தோழிகளில் ஈடுபட்டோ காலத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டும்.

ஓட்டப்பந்தய வீரன் ஒரு நொடியைத் தவறவிட்டாலும் தங்கப்பதக்கத்தை இழக்க நேரிடும். சில வினாடிகள் தானே என்று கூட அலட்சியம் செய்யாமல் காலத்தை காரியம் ஆற்ற வேண்டும்.

**முடிவுரை –**

ஒருவன் ஏழையாகப் பிறக்கலாம் ஒருவன் செல்வந்தானகப் பிறக்கலாம் .ஆனால் காலம் மட்டும் எல்லோருக்கும் பொதுவாகத் திகழ்கிறது ஒருநாள் அனைவருக்கும் 24 மணிநேரமாகத்தான் இருக்கிறது. பூமி சுற்றுச் சுற்ற நாட்களும் நகர்கிறது நிற்காது சுழலும் பூமியைப் போல் நாமும் காலத்தின் அருமையை உணர்ந்து உழைப்போமாக.

# மகாபாரதம் உணர்த்தும் உண்மைகள் ......

ஆர்.செல்வக்குமார், பட்டதாரி ஆசிரியர்

மோகத்தில் விழ்ந்து விட்டால்
மொத்தமாய் வீழ்ந்திடுவாய்

**சந்தனுவாய்** ....

சத்தியம் செய்துவிட்டால்
சங்கடத்தில் மாட்டிடுவாய்

**கங்கை மைந்தனாய்**....

முற்பகல் செய்யின்
பிற்பகல் விளையும்

**பாண்டுவாய்**....

வஞ்சனை நெஞ்சில் கொண்டால்
வாழ்வனைத்தும் வீணாகும்

**சகுனியாய்**....

ஒவ்வொரு வினைக்கும்
எதிர்வினை உண்டு

**குந்தியாய்**....

குரோதம் கொண்டால்
விரோதம் பிறக்கும்

**திருதராஷ்டிரனாய்**....

பெற்றோர்கள் செய்யும் பாவங்கள்
பிள்ளைகளை பாதிக்கும்

**கௌரவர்கள்**...

பேராசை உண்டாக்கும்
பெரும் அழிவினையே

**துரியோதனனாய்**...

கூடா நட்பு  கேடாய் முடியும்

**கர்ணனாய்**....

சொல்லும் வார்த்தை
கொல்லும் ஓர் நாள்

**பாஞ்சாலியாய்**....

தலைக்கணம் கொண்டால்
தர்மமும் தோற்கும்

**யுதிஷ்டிரனாய்**....

பலம் மட்டும்
பலன் தரது

**பீமனாய்**....

இருப்பார் இருந்தால்
கிடைப்பதெல்லாம் வெற்றியே

**அர்ஜுனனாய்**....

சாஸ்த்திரம் அறிந்தாலும்



சமயத்தில் உதவாது

**சகாதேவனாய்**...

விவேகமில்லா வேகம்
வெற்றியை ஈட்டாது

**அபிமன்யு**....

நிதர்சனம் உணர்ந்தவன்
நெஞ்சம் கலங்கிடான்

**கண்ணன்**....

வாழ்க்கையும் ஒரு
பாரதம் தான்...
வாழ்ந்திடலாம்

காலமெல்லாம்.

# ஆசிரியர் - மாணவர்

**டி.கவிதா, பட்டதாரி ஆசிரியை**

**ஆசிரியர்**

சமுதய நலன் கருதி மாணவர்களுக்காக உழைத்து அதற்கான பலனை எதிர்பார்க்க வேண்டும் .

( நல்ல தரமான விதைகளை விதைக்க வேண்டும் )

**மாணவர்**

ஆசிரியர்களிடம் கற்ற கலைகளையும் , திறமைகளையும் மற்றும் ஒழுக்கத்தையும் உள்வாங்கி அதை நாடு முழுவதும் விதைத்திட வேண்டும் என்ற நோக்கில் அந்நாளை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டும்.

**ஆசிரியர்**

மாணவர்களிடையே விதைத்த விதை சரியாக வளர்கிறதா என்று கவனமாக கவனிக்க வேண்டும்.

**இது சரியாக இருப்பதால்**

ஆசிரியர் விதைத்த விதை
மாணவர் மனதில் பட்டு
புதைந்து
ஆணிவேர் விட்டு
மெதுவாக மனதை துளைத்து
தளிர்விட்டு
அரும்பி
மலர்ந்து , விரிந்து
விருட்சமாக ஒரு நாள் விசுவரூபம் எடுக்கும்.



# கூடி வாழ்ந்தல் கோடி நன்மை

**வடிவுக்கரசி, IX-A**

**முன்னுரை**

கூடி வாழ்தல் என்பது மனிதனின் இயல்பாகும் தேவையுமாகும் தனி ஒருவனாய் வாழ்தல் இயலாது . ஒருவரை ஒருவர் சார்ந்து தான் வாழ முடியும் ஒன்றுபட்டு வாழ்ந்தால் உயர்வை அடையலாம்.

**கூடி வாழ்வதன் தேவை**

எறும்புகள் சாரை சாரையாகச் செல்கின்றன . யானைகள் கூட்டம் கூட்டமாகச் செல்கின்றன. மான்கள் கூட்டம் கூட்டமாக வாழ்வதால் தங்கள் எதிரிகளிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்கின்றன. அது போல் நாமும் ஒன்று கூடி ஒற்றுமையாய் வாழ்ந்தால் எதிரிகள் எளிதில் வீழ்த்த இயலாது. இந்த கதைகள் கூடி வாழ்வதன் பயனை நமக்கு எடுத்துரைக்கின்றன.

**வரலாறு தரும் பாடம்**

நம் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்ப்பட்ட பின்னர் சாதி , மாத , மொழி வேறுபாடுகளைக் கடந்து ஒன்று பட்டுப் போராடியதால் நம் நாடு விடுதலை அடைந்தது. இந்திய பாகிஸ்தான் போர் , சீனப்படையெடுப்பு ஆகியவற்றில் நம் பாரத நாடு வெற்றி பெற்றது . ஒன்று கூடி ஒற்றுமையுடன் பாடுபட்டதால் தான்.

**அண்மைக் கால நிலை**

அண்மைக் காலத்தில் நாமனைவரும் தமிழர். இந்தியர் என்ற ஒருமைப்பாட்டு உணர்வுகளை மறந்து வரும் காரணத்தால் “ ஒன்றே குலம் - ஒருவனே தேவன்” என்ற ஒற்றுமை உணர்வுடன் வாழ்ந்தால் இத்தகைய கலவரங்கள் தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்படாது . கூடி வாழ்வதற்குத் தடையாக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் அமைந்துள்ளன. ஏழை , பணக்காரன் என்ற பேதங்கள் நம்மை வெகுவாக ஆட்டிப் படைக்கின்றன . மனித நேய்ததை வளர்ததுக் கொண்டோமானால் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் நம் ஒற்றுமையைக் குறைக்காது.

**ஒற்றுமைக்கு பாடுபட்ட தலைவர்கள்**

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக காந்தியடிகள் , அபுல்காலம் ஆசாத் போன்ற எல்லாம் தலைவர்கள் அரும்பாடுபட்டனர். உலகத் தொழிலாளர் நன்மைக்காக பொதுவுடைமைத் தலைவர்கள் பலர் பாடுபட்டனர். இராமலிங்க அடிகளார் சமரச சமன்மார்க்க சங்கத்தை ஏற்படுத்தினார். இதன் மூலம் மத ஒற்றமையை ஏற்படுத்த விழைந்தார்.

**முடிவுரை**

**" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில்**

**ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே"**

ஏன்னும் பாரதியாரின் பாடல் வரிகளை உள்ளத்தில் கொண்டு நாமனைவரும் நம் நாட்டை உலகின் தலை சிறந்த நாடாக உயர்த்துதல் வேண்டும்.

நாம் அணைவரும் " **கூடி வாழ்ந்தல் கோடி நன்மை**" கிடைக்கும்.

## விந்தையான கடல் வாழ் உயிரினங்கள்

மு.இலட்சுமணன், பட்டதாரி ஆசிரியர்

**நீலத்திமிங்கலம்**

கடல் வாழ் உயிரினங்களின் , மிகப் பெரிய விலங்கு இதுவே குட்டி போட்டு பால் கொடுக்கும் விலங்கு இனத்தைச் சேர்ந்தது. தலையிலிருந்து வால் வரை இதன் நீளம் 110 அடி ஆகும் இதனது எடை சுமார் 180டன்.

**சீல்கள்**



அண்டார்டிகா கடல் பகுதிகளில் காணப்படும் சீல்கள் கூட்டமாக வாழும் தன்மையுள்ளவை. ஏறத்தாழ 40 மில்லியன் சீல்கள் ஒரே இடத்தில் கூட்டமாக வசிக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவை சுமார் 225 கிலோ எடையுள்ளவை ஆகும்.

**ஏம்பரன் பெண் குயின்**



அண்டார்டிகா கடல் பகுதியில் வாழும் ஆண் பெண் குயின்கள் முட்டைகளை தன் ஜவ்வு போன்ற பாதங்களின் 60 நாட்களுக்கு அடைக்காக்கும். அதன் பின் குஞ்சுகள் வெளியே வந்ததும் தன் தொன்டைப்பகுதியில் சுரக்கும் ஒரு விதத் திரவத்தை தன் குஞ்சுகளுக்கு கொடுக்கும்.

தாய் பெண் குயின்கள் குஞ்சுளை கவனிக்கத் துவங்கியதும் தன் எடையில் 16 கிலோ குறைந்துள்ள ஆண் பெண்குயின் உணவருந்த கடலுக்குள் செல்லும் இவற்றை நாம் "தாயுமானவன்" என அழைக்கலாம்.

## சிறப்பு "ழ" கரத்தின் சிறப்பு

ப.சுப்பாராஜ், தமிழாசிரியர்

தமிழ் தவிர உலகில் எந்த மொழியிலும் ' ழகர' ஒலி இல்லை 'ழகரம்' தமிழுக்கே தனிச் சிறப்பானதாகும் 'ழ' என்ற தமிழ் எழுத்து கரம் என்ற எழுத்துச் சாரியை பெற்று 'ழகரம்' "ழ" என்ற எழுத்தைக் குறிக்கிறது.

1. எழுத்து சொல் ,பொருள்,யாப்பு ,அணி இவை ஐந்தில் 'எழுத்தில்'மட்டுமே "ழகரம்" உள்ளது.எழுத்து இன்றியமையாதாது . உயர்ந்தது.

2. ஏழு கிழமைகளில் வியாழனுக்கு மட்டுமே 'ழகரம்' குரு பகவானைக்குறிக்கும்.

3. 12 தமிழ் மாதங்களில் மார்கழியில் மட்டுமே 'ழகரம்' உண்டு மதி நிறைந்த மார்கழித் திங்கள் சிறந்தது.

4. கதிரவன் , நிலவு , மேகம் முதலிய சொற்களில் இல்லாத 'ழகரம்' தாழ்ப்பாளில் மட்டுமே உள்ளது. பாதுகாப்புக்கு தாழ் அவசியம்.

5. செங்கல் , மணல் ,சுவர், கதவு, கூரை,தரை முதலிய சொற்களில் இல்லாத 'ழகரம்' தாழ்பாளில் மட்டுமே உள்ளது. பாதுகாப்புக்கு தாழ் அவசியம்.

6. உடல் உறுப்புகளான கை, கால், செவி, வாய், மெய், நாசி, இதயம், குடல், கணையம், கல்லீரல் முதலியவற்றில் இல்லாத 'ழகரம்' கழுத்திலும் , விழியிலும் உள்ளது.

7. முதல் ஒன்பது வரையிலான எண்களில் 'ஏழு' என்ற எண்ணில் தான் 'ழகரம்' உள்ளது கடைவள்ளல்கள் எழுவர் அகத்திணைகள் ஏழு வார நாட்கள் ஏழு.

8. மரங்களின் பெயர்களில் 'தாழைக்கும்' வாழைக்கும் 'ழகரம்' உண்டு. தாழை அதிக மணம் வீசும், வாழை ஒரு குழந்தை பெற்று உயர்ந்து நின்று தன் இனம் அழியாமல் காக்கிறது .

9. தாவர உறுப்புகளில் வேர் . தண்டு ,கிளை , தளிர் , இலை ,மலர் , பிஞ்சு ,காய்களில் இல்லாத 'ழகரம்' இனிக்கும் வித்துள்ள பழத்தில் 'ழகரம்' உள்ளது.

10. திசைகள் நான்கில் கிழக்கில் மட்டுமே 'ழகரம்' உள்ளது கதிரவன் உதித்து உலக இருளை நீக்கி உயிர்கள் வாழத் துணை நிற்கிறது.

11. உலகின் எந்த மொழிப் பெயர்களிலும் இல்லாத 'ழகரம்' தமிழில் மட்டுமே உள்ளது. அமிழ்தினும் இனிய, தமிழ் மொழியில் உள்ள சிறப்பெழுத்தான 'ழகரத்தை'இன்றியமையாத உயர்ந்த சிறந்த சொற்களில் அமையந்துள்ளன நம் முன்னோர்களின் நுண்ணறிவை வியந்து போற்றி வாழ்த்துவோம்.

# தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா

சு.அபிராமி, உதவித்தலைமையாசிரியை

“தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா” என்று பாடத்தில் படித்த தமிழனின் பெருமையை மறந்ததா? இன்றைய சமுதாயம் என்றே கேட்கத் தோன்றுகிறது. “ பண்பாடு என்ற வார்த்தையை தன் உயிர்மூச்சாய் எண்ணி வாழ்ந்தவன் தமிழன்” என்று வரலாறு எடுத்துரைக்கிறது . தமிழனின் தலையாய பண்புகளில் ஒன்று வணக்கம் செலுத்துவது இரு கைகளையும் கூப்பி நெஞ்சின் நேர் நிறுத்தி முகத்தில் சிறு புன்முறுவலோடு “ வணக்கம்” என கூறி வரவேற்பதற்கு ஈடு இணை உண்டா . என்று எண்ணிப் பார்க்க வேண்டும் .

இன்னும் பலவகையான வணக்கங்களைப் பார்க்கிறோம் அரைகுறையாக கைகளை உயர்த்துவதும் , நெஞ்சின்மீது வலது உள்ளங்கை வைப்பதும் , தலையின் மேல் கை உயர்த்தி அசைப்பதும் நெற்றியின் மேல் கை வைத்து போகிற போக்கில் சொல்வதும் , இவையெல்லாம் வணக்கங்களா , சற்றே சிந்திப்பீர் ,

இரு கைகளை கூப்பி வணக்கம் என்று வாயாறச் சொல்ல சொற்ப மணித்துளிகள் மட்டுமே செல்வாகும் . மேலும் வணக்கம் என்று இரு கைகளை கூப்பும் போது நமது பத்து விரல்களின் நுனிகள் அழுத்தப்படும் போதும் நம்மை அறியாமலே நுண்புள்ளிகள் தூண்டப்பட்டு இதயத்திற்கு வலு சேர்ப்பதாக அறிவியல் அறிஞர்களும் கூறுவர். அக்குபிரஷர் மருத்துவ முறையும் கூறுகிறது.

நமக்கு எதிரே இருப்பவர் நண்பரோ, பகைவரோ நாம் செலுத்தும் வணக்கத்திற்கு அவர் நிச்சயம் வணக்கம் செலுத்துவார் . இதனால் நட்பு வளரும் , பகை கருகும்.

மாணவர்கள் ஆசிரியருக்கு வணக்கம் செலுத்தினால் அவர் மீது ஆசிரியருக்கு மதிப்பு கூடும் , உடன் பணியாற்றுபவருக்கு வணக்கம் செலுத்தினால் அன்பு வளரும் , அறிமுகமில்லாதவர்க்கு வணக்கம் செலுத்தினால் உன் மதிப்பு உயரும்இறைவனுக்கு வணக்கம் செலுத்தினால் இறையருள் கூடும் .

- கூட்டத்தை தொடங்கவும் வணக்கம்
- நிறைவு உரையின் போதும் வணக்கம்
- திருமண வரவேற்பிலும் வணக்கம்
- திரும்பிச் செல்லும் போது வணக்கம்
- முதியோரை கண்டாலும் வணக்கம்
- முக்தி அடைய இறைவன் முன் வணக்கம்
- சபையில் முதல் வார்ததை வணக்கம்
- சடங்கு சம்பிரதாயத்திலும் வணக்கம்
- அண்டை நாட்டினரின் வியப்பு நம் வணக்கம்
- அன்றாடம் நம் பிள்ளைக்கு சொல்லித் தருவோம் வணக்கம்

இவ்வாறு வணக்கம் செலுத்துவதின் பெருமையை எனக்கு கற்று தந்த எம்பள்ளிக்கு என் மனமார்ந்த வணக்கங்கள்.

# நூலக வாசிப்பு

## TO DAY A READER ....... TOMORROW A LEADER

M.செந்தில் ஆறுமுகம், தொழிற்கல்வி ஆசிரியர்

- மனித மனங்களின் மொத்த பதிவுகளை இறக்கி வைக்கும் இதயமே நூல்களாகும்.
- புத்தாகம் நிச்சயம் உங்கள் மனதை புத்தாக்கம் செய்யும்.
- தொட்டுத் தொட்டுப் பார்த்தால் அதுவே வெற்றியின் ஆயுதம் .
- அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை முதலமைச்சராக இருக்ககும் போது மும்பை பயணம் செல்ல நேர்ந்தது அப்போது அவர் தரைவழியாக கார்மூலம் மும்பை சென்றார் அனைவரும் விமானவழிப்பயணம் மேற்கொள்ளாமல் தரை வழிப்பயணத்தை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள் என கேட்டபோது – காரில் செல்லும் போது பத்து புத்தகங்கள் படிக்க முடியும் என பதில் கொடுத்தார்கள். இச் செயல் அவருக்கு வாசிப்பின் மீது உள்ள பற்றைக் காண்பிக்கிறது.
- அரசியல் சட்ட மேதை திரு. அம்பேத்கர் அவர்கள் அரசின் சார்பாக வெளிநாடு செல்ல நேர்ந்தது. அப்போது அலுவலர்கள் எந்த இடத்தில் தங்குவதற்கு முன்பதிவு செய்ய வேண்டும், எனக்கேட்டபோது நூலகம் அருகில் உள்ள தங்கும் விடுதியில் அறை ஒதுக்கீடு செய்யச் சொன்னாராம்.
- சுதந்திரப் போராட்ட தியாகி பகத்சிங் அவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டு இருந்த சமயம் தங்களது கடைசி ஆசை என்ன எனக் கேட்டபோது ஒரு புத்தகம் படிக்க கால அவகாசம் தர வேண்டும் எனச் சொன்னாராம்.
- புத்தகங்கள் என்பவை வெறும் காகிதங்கள் அல்ல கருத்துக் கருவூலங்கள் நாம் கையில் எடுக்கின்ற கருத்து ஆயுதங்கள் மனிதர்களுக்கு கால எல்லைகள் உண்டு.ஆனால் இலக்கியங்களுக்கு கால எல்லைகள் இல்லை. எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஆற்றல் பெற்றவை புத்தகங்களே.
- எத்தனையோ பெரிய முடியாட்சி அரசுகள் இருந்த இடம் தெரியாமல் மடிந்தன . அரசாட்சி செய்தவர்கள் தற்போது இல்லை அரண்மனைகள் இருந்த இடம் தெரியவில்லை. ஆனால் அவர்களால் ஆதரிக்கப்பட்ட புலவர்களும் அறிஞர்களும் எழுதிய காவியங்கள் நிலைத்து நிற்க்கின்றன . அன்றைய நாகரிக வளர்சியை எடுத்துரைக்கின்றன. “மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ! உன்னையறிந்தோ தமிழை ஒதினேன்”
- எனச் சோழ மன்னரை எதிர்த்து ஒரு புலவரால் முடியாட்சி காலத்தில் பாட முடிகிறது என்றால் அவரது அறிவு நுட்பத் திறமையால் தான் .

" நமக்கு தொழில் கவிதை

நாட்டிற்குழைத்தல்

இமைப் பொழுதுஞ் சோராதிருத்தல்"

என பாரதியார் பாடியதும் அறிவுப்புரட்சியால் தான்

- மகாத்மா காந்தியடிகளின் " சத்திய சோதனை மக்களிடையே ஒரு அதிர்வை – தாக்கத்தை உண்டாக்கியது.
- இதில் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களின் தனிமைத் துயரைப் போக்கியதும் அவர்கள் விடுதலை வேள்வியில் மேலும் பல்வேறு வழிகளில் தங்களை ஈடுபடுத்த ஒரு சிந்தனையை கொடுத்தும் புத்தகங்களே. அவர்கள் இருந்த சிறைச்சாலைகளை தவச் சாலைகளாக மாற்றியதும் புத்தகமே . உண்மையான கல்வி என்பது வகுப்பறையின் வெளியே படிப்பது தான்.
- நாளிதழ்களை வாசிப்பதன் மூலம் ஒருவர் உடனுக்குடன் தகவல்களைத் தெரிந்து கொண்டு தன்னை வளர்த்துக் கொள்ள முடியும்.
- தற்கால சூழ்நிலையில் பொது நூலகத்தில் உறுப்பினராக சேர்ந்து நூல்களை வீட்டுக்கு எடுத்து வந்து வாசிக்கலாம் இண்டெர்நெட் மூலம் இ…புக்குகளை ( E – Book) பதிவிறக்கம் செய்து படிப்பதன் மூலம் பொது அறிவை வளர்க்கலாம்.
- மாத இதழ்களை வாங்கி கையில் அல்லது பையில் வைத்துக்கொண்டால் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவற்றை வாசிக்க தொடங்கலாம். தொலைதூரப் பயணத்தின் போதும் மருத்துவ மனையில் காத்திருக்கும் போதும் மாத இதழ்களை படிக்கும் பழக்கத்தை மேற் கொள்ளலாம்.
- தேடும் பொறிகளை பயன்படுத்தி தேவையான தகவல்களை ஒரு சில நொடிக்குள் நாம் பெற்றுக் கொள்ள முடியும்.
- தினமும் ஒரு மணி நேரம் வாசிக்கும் பழக்கம் உருவாக்க வேண்டும் வாரம் ஒரு புத்தகம் படிக்கும் வழக்கத்தை கடைபிடிக்க வேண்டும் மாதம் ஒரு புத்தகத்தை வாங்கும் பழக்கத்தை வழக்கமாகக் கொள்ள வேண்டும் . விட்டில் அனைவரும் சிறு நூலகம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

**வீதிக் கொரு நூலகம்**

ஊருக் கொரு நூலகம் என அமைத்து

அனைத்து மக்களையும் வாசிக்க வைத்து அதன் மூலம் சிந்திக்க வைத்து வாழ்க்கையில் வளர்ச்சி பெறச் செய்து – அறிவுசார் சமுதாயம் அமைக்க நம்மால் முடிந்த திருப்பணியை இந்த நிமிடத்திலிருந்து செய்வோம் என நினைவில் கொள்வோம்.

**குரல் ஒலிக்கும்….**